த.வெ.க. ஆட்சியில் தமிழகத்தில் ஒரே நாளில் 8 கொலைகள்!

அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்த தமிழ்நாட்டின் இன்றைய நிலை பாரீர்!

சென்னை, அக். 2 -

தொடர் கொலைகள் 'அமைதிப் பூங்கா' என கருதப்படும் தமிழகத்தில், அதிகரித்து வரும் தொடர் படுகொலை சம்பவங்கள் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி வருகின்றன. இது ஒட்டுமொத்த பொதுமக்களையும் பெரும் கவலையில் ஆழ்த்தியுள்ளது. இந்த நிலையில், நேற்று ஒரே நாளில் தமிழகம் முழுவதும் 8 கொலைகள் நடந்து உள்ளன.

அதுபற்றிய விவரம் வருமாறு:

தலைநகர் சென்னையில்

சென்னை ஜஸ்அவுஸ் வி.ஆர். பிள்ளை தெருவைச் சேர்ந்தவர் அஜித் (வயது 27). இவர் தகவல் தொழில்நுட்ப நிறுவனம் ஒன்றில் ஊழியராக வேலை செய்து வந்தார். இவருக்கும், அதே பகுதியைச் சேர்ந்த ஹரீஸ் என்பவருக்கும் முன்விரோதம் இருந்து வந்தது. அஜித் தலைமையில் ஒரு கும்பலும், ஹரீஸ் தலைமையில் ஒரு கும்பலும் தனித்தனியாக செயல்பட்டு வந்தனர். இரு கும்பலுக்கும் இடையே கடந்த சில ஆண்டுகளாக யார் கெத்து, யார் பெரிய ஆள் என்ற மோதல் போக்கு நீடித்து வந்தது. இவர்கள் அவ்வப்போது தாக்குதலில் ஈடுபட்டு வந்தனர். இவர்களுக்கு இடையேயான மோதலால் அந்த பகுதியில் உள்ள பொது மக்களுக்கு அச்சுறுத்தல் நிலவி வந்தது.

இந்தநிலையில் நேற்று முன் தினம் நள்ளிரவு அஜித், தனது வீட்டு வாசலில் அமர்ந்து இருந்தார். அப்போது 5 பேர் கொண்ட கும்பல் அஜித்தை சுற்றி வளைத்து சரமாரியாக அரிவாளால் வெட்டினர்.

வெட்டிக்கொலை

இதில் அஜித் பலத்த காயம் அடைந்தார். அவரது அலறல் சத்தம் கேட்டு வீட்டுக்குள் இருந்த அவரது தாயார் சரஸ்வதி வெளியில் ஓடி வந்து மகன் வெட்டப்படுவதை தடுத்தார். ஆனால் கொலை வெறி கும்பல் அவரையும் அரிவாளால் வெட்டினார்கள். இதையடுத்து ரத்தவெள்ளத்தில் உயிருக்கு போராடிய அஜித்தும், அவரது தாயார் சரஸ்வதியும் ராயப்பேட்டை அரசு ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டனர்.

டாக்டர்கள் பரிசோதனை செய்ததில் அஜித் உயிரிழந்தது தெரிய வந்தது. அவரது தாயார் தொடர்ந்து ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். அஜித்தை வெட்டி சாய்த்த கும்பலைச் சேர்ந்தவர்கள் தப்பி ஓடிவிட்டனர். அஜித் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்த சம்பவம் குறித்து ஜஸ்அவுஸ் போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். மேலும், இந்த கொலை தொடர்பாக 3 பேரை பிடித்து விசாரித்து வருவதாக போலீசார் தெரிவித்தனர்.



பெட்ரோல் பங்க் உரிமையாளர்

நெல்லை டவுன் அருகே உள்ள மணிபுரம் பகுதியை சேர்ந்தவர் டால்டன் (வயது 76). இவர் அந்த பகுதியில் பெட்ரோல் பங்க் வைத்து உள்ளார்.

இவரது அண்ணன் நிக்கோலஸ் ராஜரத்தினம் (78). இவர்கள் இருவருடன் மேலும் 2 சகோதரர்களும் உள்ளனர். அனைவரும் வெளிநாட்டில் வேலை பார்த்துவிட்டு தற்போது சொந்த ஊரில் வசித்து வருகிறார்கள்.

அதே பகுதியை சேர்ந்தவர் செந்தில் (43). இவருக்கு திருமணம் ஆகி மனைவி, 3 குழந்தைகள் உள்ளனர். செந்தில் சென்னையில் வெல்டராக பணியாற்றி வருகிறார்.

'பார்க்கிங்' தகராறு

அவ்வப்போது விடுமுறையில் ஊருக்கு வந்துசெல்வார். இவரது குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட கோவில் டால்டன் வீட்டின் அருகே உள்ளது. இந்த கோவிலை சுற்றியுள்ள காலி இடத்தில் டால்டன் குடும்பத்தினர் தங்களின் காரை நிறுத்துவது வழக்கம். இதை செந்தில் கண்டித்து வந்தார். இந்த 'பார்க்கிங்' தகராறு காரணமாக 2 பேரின் குடும்பத்தினருக்கும் இடையே முன்விரோதம் இருந்து வந்தது.

சமீபத்தில் சொந்த ஊருக்கு வந்த செந்தில் நேற்று காலை தனது மனைவியுடன் வீட்டில் இருந்து மோட்டார் சைக்கிளில் புறப்பட்டு அந்த கோவிலுக்கு சாமி கும்பிட சென்றார்.

சரமாரி கத்திக்குத்து

அப்போது கோவில் அருகே நிறுத்தப்பட்டு இருந்த காரை டால்டனின் மகன் நரேந்திரன் (27) என்பவர் வெளியே எடுத்துள்ளார். இதைக்கண்டு ஆத்திரமடைந்த செந்தில் உடனே அங்கு சென்று தட்டிக்கேட்டார்.

அதில் இருவருக்கும் தகராறு ஏற்பட்ட நிலையில் திடீரென ஒருவரையொருவர் தாக்கியதாக கூறப்படுகிறது. இதனை பார்த்த நிக்கோலஸ் ராஜரத்தினம் அங்கு ஓடிச் சென்று தகராறை தடுக்க முயன்றார்.

அப்போது செந்தில், தான் வைத்திருந்த கத்தியை எடுத்து நிக்கோலஸ் ராஜரத்தினத்தின் மார்பு பகுதியில் குத்தினார். இதில் நிலைகுலைந்த அவர் ரத்த வெள்ளத்தில் சரிந்து விழுந்தார்.

சத்தம் கேட்டு அங்கு ஓடி வந்த டால்டனையும், செந்தில் சரமாரியாக குத்தியதாக கூறப்படுகிறது. இதில் நிக்கோலஸ்ராஜரத்தினம், டால்டன் ஆகியோர் படுகாயம் அடைந்தனர். நரேந்திரன் தனது தந்தையை காப்பாற்றுவதற்காக செந்தில் வைத்து இருந்த கத்தியை பறிக்க முயன்றார். இந்த பரபரப்பில் நரேந்திரன் கையிலும், செந்திலின் கை மற்றும் வயிறு பகுதியிலும் கத்திக்குத்து காயம் ஏற்பட்டது.

இரட்டைக்கொலை

காயம் அடைந்த டால்டன், நிக்கோலஸ் ராஜரத்தினம், நரேந்திரன் ஆகிய 3 பேரும் அங்குள்ள ஒரு தனியார் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர். அங்கு நிக்கோலஸ் ராஜரத்தினம் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார். மற்ற 2 பேரும் மேல் சிகிச்சைக்காக பாளையங்கோட்டை அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டனர். அங்கு டால்டனும் உயிரிழந்தார். அதேநேரத்தில் காயம் அடைந்த செந்தில் சிகிச்சைக்காக பாளையங்கோட்டை அரசு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். சம்பவம் குறித்து நெல்லை சந்திப்பு போலீசார் வழக்குப்பதிவு செய்து செந்திலை கைது செய்தனர். ஒரே ஆஸ்பத்திரியில் நரேந்திரனும், செந்திலும் சிகிச்சை பெற்று வருவதால் அங்கு போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

தி.மு.க. பிரமுகர்

மயிலாடுதுறை அருகே ஆனந்த தாண்டவபுரம் பகுதியைச் சேர்ந்தவர் தமிழ்ச்செல்வன் (45), அரசு பஸ் கண்டக்டர். தி.மு.க.வின் தொழிலாளர் முன்னேற்ற சங்க செயற் குழு உறுப்பினராக பதவி வகித்து வந்தார். இவர் நேற்று முன்தினம் இரவு மர்ம நபர்களால் அரிவாளால் வெட்டி படுகொலை செய்யப்பட்டார். பணி முடிந்து மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பியபோது இந்தச் சம்பவம் நடந்துள்ளது. இதுகுறித்த புகாரின்பேரில் மயிலாடுதுறை போலீசார் வழக்குப்பதிவு செய்து தலைமறைவான கொலையாளிகளை வலை வீசி தேடி வருகின்றனர்.

தேனி மாவட்டம் கம்பத்தில் பணம் கொடுக்கல்வாங்கல் தகராறில் கூலித் தொழிலாளி சந்தோஷ்குமார் (27) என்பவர் பீர் பாட்டிலால் குத்திக்கொலை செய்யப்பட்டார். மதுபான பாரில் ஏற்பட்ட தகராறில், மோட்டார் சைக்கிளில் வந்த சுகீர் மற்றும் அவரது நண்பர்கள் 2 பேர் சேர்ந்து இந்த கொலையை செய்துள்ளனர். இதுகுறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார் 3 பேரையும் கைது செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

கழுத்து அறுத்துக் கொலை

சேலம் பெரியபுத்தூரில் மதுபோதையில் மீண்டும் குடிக்க பணம் கேட்டு தகராறு செய்த பேரன் விஜி (34), பாட்டி பழனியம்மாளை (80) அடித்துக் கொன்றார். தடுக்க வந்த தாத்தா மற்றும் தந்தையையும் தாக்கிய அவரை போலீசார் கைது செய்தனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக் கோட்டை அருகே செய்வினை செய்ததாக சித்தி L சரசம்மாவை (50) கழுத்தை அறுத்து படுகொலை செய்த கணவரின் அண்ணன் மகனான சலூன் கடைக் காரர் அசோக் (27) என்பவரை போலீசார் கைது செய்தனர்.

குமரி மாவட்டம் திங்கள் சந்தை மேக்காமண்டபம் அருகே உள்ள கடமலை கன்றுவில் தங்கலீலா (67) என்பவரை அவரது மகன் சிபி (37) என்பவர் முகத்தை தலையணையால் அமுக்கி கொலை செய்துள்ளார். மதுகுடிக்க பணம் தராததால் கொலை செய்தது விசாரணையில் தெரியவந்துள்ளது.

இவ்வாறு 8 கொலைகள் நிகழ்ந்துள்ளன.

நன்றி
தினத்தந்தி
30.09.2026

கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து

மதுராந்தகம் தெற்கு ஒன்றியத்தில் - தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனைக் கூட்டம்!

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆலோசனை வழங்கினார்!

மதுராந்தகம், அக்.2-

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் இ. பரந்தாமனை ஆதரித்து, மதுராந்தகம் தெற்கு ஒன்றியத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள 13 பாகங்களில் உள்ள வீராலூர், நல்லூர், பெரிய வெண்மணி ஆகிய ஊராட்சிகளுக்குட்பட்ட 281, 282, 283 ஆகிய 3 பாகங்களில் மேற்கொள்ள வேண்டிய தேர்தல் பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம், 30.09.2026 புதன் கிழமை காலை 10.30 மணி அளவில், கீழ்கரணியில் உள்ள தேர்தல் பணிமனையில் நடைபெற்றது.



சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு தலைமையில், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.மோ.அன்பரசன், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர், மதுராந்தகம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் பொன். சிவக்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கலந்துகொண்டு தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கினார்.

இக்கூட்டத்தில் ப.தாயகம் கவி, கே.எஸ்.ரவிச்சந்திரன், பி.கே.மூர்த்தி, சி.மகேஷ் குமார், டாக்டர் ஜி.சாந்த குமாரி, எல்.பி.எட். மோகன், கு.கிருஷ்ண மூர்த்தி, பா.பிரதீப்குமார், எல்.சம்பத்குமார், நா.நெப்போலியன், இரா. டீக்கா, பி.செந்தில்குமார், ஆர்.பி.ரமேஷ், ஆர். விஜய் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும், மதுராந்தகம் தெற்கு ஒன்றியத்திற்குட்பட்ட பெரிய வெண்மணி, வீராலூர், நல்லூர் ஆகிய ஊராட்சிகளின் மூன்று பாகங்களுக்கான பொறுப்பாளர்கள் ராஜேஷ், அம்பேத்கார், பி.எம்.சேகர், பி.ஜெயராமன், முத்து, ஜெயபால், சுரேஷ், ருக்கு, கண்ணன், ராஜாமணி, லோகு, கலைமணி, ரமேஷ், வேலாயுதம், நடராஜ், ராஜு மற்றும் கழக நிர்வாகிகள், செயல்வீரர்கள், முன்னோடிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு, மனிதநேய ஜனநாயகக் கட்சி சார்பில் நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மனிதநேய ஜனநாயக கட்சி தலைவர், சிதம்பரம் சட்டமன்ற உறுப்பினர் மு.தமிமுன் அன்சாரி ஆகியோர் ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினர். இதில் மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தனசேகர், திருப்ப தெற்கு மாவட்டப் பொறுப்புக்குழு உறுப்பினர் கே.எம்.முபாரக் அலி உள்ளிட்ட கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

விடுமுறை

உத்தமர் காந்தியடிகள் பிறந்த நாளையொட்டி 'முரசொலி' அலுவலகத்திற்கு இன்று **(2.10.2026 - வெள்ளிக்கிழமை)** விடுமுறை!

'முரசொலி'யின் அடுத்த இதழ். வழக்கம் போல் **4.10.2026-ஞாயிற்றுக்கிழமை** அன்று வெளிவரும்.

- நிர்வாகி

முத்தமிழறிஞர் கலைஞரின்

முன்னாள் பாதுகாவலர் (PSO) பாண்டியனின் மனைவி திருமதி மீனாட்சி மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, அக். 2 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முன்னாள் பாதுகாவலர் (PSO) பாண்டியனின் மனைவி திருமதி.மீனாட்சி அவர்கள் (வயது 63) நேற்று முன்தினம் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.



இச்செய்தியறிந்ததும் கழக முன்னணியினர், தோழர்கள் மறைந்த திருமதி. மீனாட்சி அவர்களின் உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

முத்தமிழறிஞர் கலைஞரின்

முன்னாள் பாதுகாவலர் (PSO) பாண்டியனின் மனைவி திருமதி மீனாட்சி மறைவு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக். 2 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முன்னாள் பாதுகாவலர் (PSO) பாண்டியனின் மனைவி திருமதி மீனாட்சி அவர்கள் நேற்று முன்தினம் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்ததும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

தலைவர் கலைஞர் அவர்களிடம் நீண்டகாலம் பாதுகாவலராகப் பணியாற்றியவர் பாண்டியன். அவரது மனைவி திருமதி மீனாட்சி அவர்கள் நேற்று முன்தினம் மறைவுற்றார் என்ற செய்தியறிந்து துயருற்றேன்.

மனைவியை இழந்து வாடும் பாண்டியன் அவர்களுக்கும் மற்றும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறுதலைவர்மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.